# நமக்குள் நாம்...!

ஆசிரியர்:

பெருஞ்சித்திரனர்

வெளியீடு:- திருக்குறள் மன்றம்

பல்லடம்.

# இருள்மிகு நாடே...!

அரசியல் தெளியா மாந்தரிங் கொருபால்;
அறம்பிழை வாணிகர் ஒருபால்;
வரவியல் செலவியல் அறிகிலர் ஒருபால்;
வருவதை முடக்குவர் ஒருபால்;
கரவுளம் ஒருபால்; குலவெறி வளர்க்கும்
கயவரும், களியரும் ஒருபால்;
இரவினும் திண்ணிய மடமைகொள் நாடே
எங்கொளி பெறுகுவ தினியே!

விலை 0-50 காசுகள்

# நமக்குள் நாம்...!

உலகின் மிகப் பழைய இனமக்களுள் மிகப்பழையவர்கள்-நாம். இதற்கு வரலாறு உண்டு; சான்றுகள் உண்டு; எண்ணித் தொலையாத இலக்கண இலக்கியங்களும் உண்டு. பிறர்க்கெல்லாம் மொழி என்று ஒன்று தோன்ரு முன்பே, இயற்கையாக மொழி தோன்றி, எழுத்துகள் தோன்றி, இலக்கியங்கள் தோன்றி, அவற்றுக்கான இலக்கணங்கள் தோன்றியிருந்த மொழி நம்மொழி. இனி, பிற மொழிகளிலெல்லாம் உள்ள இலக்கியங்கள் மாந்த நடைமுறைக் கொவ்வாத கற்பனைகள் மிடைந்த கதைகள் நிரம்பிய வெற்று இலக்கியங்களாகவும், இலக்கணங்கள் எழுத்துக்கும் உரைநடைக்குமான வெற்று இலக்கணங்களாகவுமே இருப்ப, நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே நமக்கிருந்தமொழி இலக்கியங்கள் மக்களுக்கான வாழ்வு இலக்கணங்களாகவும், அன்றிருந்த மொழி இலக்கணங்கள் அவர்களுக்கான வாழ்வு இலக்கியங்களாகவுமே இருந்தன; இன்றும் இருக்கின்றன. அன்றிருந்த தொல்காப்பியம் ஓர் இலக்கண இலக்கியமாகவும், அக்கால் தோன்றிய திருக்குறள் ஓர் இலக்கிய இலக்கணமாகவும். இன்றும் விளங்குவதே நம் கூற்றினை மெய்ப்பிக்கப் போதுமான சான்ருகும்.

இத்தகைய வரலாற்றுச்சிறப்பும், மொழிச்சிறப்பும், வாழ்க்கைச்சிறப்பும் பெற்று விளங்கிய நாம், இன்று, உலகில் உள்ள எல்லா இன மக்கட்கும் கடைப்பட்டவராக, அடிமைப்பட்டவராக, நாடோடிகளாக இருப்பதுமன்றி, நமக்குள் நாமே பகைவர்களாக்வும் ஒருவரை ஒருவர் கீழ்மைப்படுத்தும் விரகாண்மை மிக்க-வர்களாகவும், நம்மை நாமே வஞ்சித்துக் கொள்ளும் தன்னலம் மிகுந்தவர்களாகவும், அண்டை அயலாரை வீழ்த்தும் கரவு நிறைந்தவர்களாகவும், ஒன்றும் அறியாத நம் மக்களின் சிறிய ஈட்டத்தையும் ஏமாற்றிப் பறிக்கும் கல்நெஞ்சக் காரர்களாகவும், நம் தனி ஒருவர்க்காக நம் இனத்தையே காட்டிக்கொடுக்கும் கயவர்

களாகவும், நமக்குள் நாமே அடித்துக்கொள்ளும் காட்டு விலங் காண்டிகளாகவும் இருகின்ருேமே என்று நினைத்தால், நமக்குள் நாமே சிரித்துக்கொள்வதா, அழுது புலம்புவதா அல்லது நாணி நான்று கொண்டு உயிரை விடுவதா என்று நினைக்கத் தோன்றுகின்றது.

மானம் மிகுந்த நம் இனந்தான் இன்று மானமிழந்து மதிகெட்டு ஒரு வேளைச் சோற்றுக்காக மாற்ருன் வீட்டு வாயிலில் மண்டி யிட்டுக்கிடக்கின்றது. வீரத்தைப் பெரிதாகப் போற்றிய நம் இனந்தான் இன்று வீரமிழந்து நரம்பு துவண்டு, வீசியெறியப்படும் வெள்ளெலும்புத் துண்டிற்குப் பிற இனத்தவனின் வெளிப்புற வாயிலில் காத்துக்கிடக்கின்றது. ஒழுக்கத்தை உயிரெனப் பேணிய நம் இனந்தான், இன்று ஒழுக்கத்தை உதறிவிட்டு, நாடி நரம்புகளில் நடுக்கமின்றிச் சொல்லில் நாணமின்றி, எத்துறையும் புகுந்து, கிடைக்கின்ற எச்சில் சோற்றுக்கு எச்செயலையும் செய் வதற்கு எப்பொழுது எப்பொழுதெனக் காலம் பார்த்துக் கிடக் கின்றது மொத்தத்தில் நாம் நாயினும் இழிந்தவர்களாக, பேயி னும் கொடுமை மிகுந்தவர்களாக மாறிவிட்டோம். நம் பெருமை, நமக்குற்ற வாழ்க்கைச் சிறப்பியல்கள் அனைத்தும் காய்ந்த கனவுகளாக, உதிர்ந்த வெற்றுச் சருகுகளாகப் போய்விட்டன. கற்சிலைகளாக, இருந்த நாம் இன்று சிதறிச் சிதைந்து போகும் கற்சில்லுகளாக வீழ்ந்து கிடக்கின்ருேம். நம் பெருமை இன்று சிலப்பதிகார, மணிமேகலையாக வடிவமைத்துக் கூறப்பெறுகின் றது. திருக்குறள் பரிமேலழகர் உரையாக எழுதிக்காட்டப் படுகின் றது; சேரன் செங்குட்டுவனுக நடித்துக் காட்டப்பெறுகின்றது.

ஒரு கண்ணகியை வைத்துக் கொண்டே இங்கு உள்ள அனைத்துப் பெண்களையும் கற்பின் கொழுந்துகளாக, பொற்பின் செல்விகளாகப் பிறர் நம்பும்படி நாம் கூச்சலிட்டுக் கொண்டிருக் கின்ருேம் ஓர் ஆரியப்படை கடந்த பாண்டியனை நினைவூட்டிக் கொண்டே இங்குள்ள அனைத்துக் கோழையரையும் நெடுஞ்செழியர் களாக விலைபோக்கிக் கொண்டிருக்கிருேம். ஒரு திருக்குறளை

வைத்துக் கொண்டே இவ்வுலக முழுவதையும் விலை பேசி வாங்கிவிட முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். இங்கு நமக்குத் தலைவர்களாக வந்து வாய்த்தவர்களும் நம் அனைத்துப் பேராசைகளுக்கும் ஏற்ற பூசாரிகளாக நின்று, நம்மையே ஆட்டிப்படைத்துக் கொண்டு, நம்மை நாளுக்குநாள், மேலுக்கு மேல் ஏமாற்றிக் கொண்டே இருக்க விரும்புவதுடன், இவர்களின் கரவான ஆனால் கவர்ச்சியான எண்ணங்களுக்குத் தக்கபடி என்றென்றும் நாம் ஏழைகளாகவும் கோழைகளாகவுமே இருக்க வேண்டுமென்றும் எதிர்பார்த்துக் கிடக்கின்றனர், அவர்கள் நம்மை இணைத்து அணைத்துப் பேசுகின்ற வெறும் பேச்சில் நாம் மயங்கி, சொக்கிக்கிடக்கும் வண்டுகளாகச் சோர்ந்திருப்பதைப் பயன்படுத்தி, அவர்களின் தந்நலச் செயல்களுக்கு உரமேற்றிக் கொள்கின்ற தன்மையை, இனவுணர்வும் பொது நலமும் அற்ற நம் போல் உள்ளவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது.

நம்மோடு நாமாகக் கிடக்கும் நம்மில் ஒருவன் காலவுணர்ச்சியால் கீண்டப் பெற்று, இனவுணர்வு உள்ளூரப் பெற்று, அறிவூட்டமும் வினைத்திட்பமும் செறியப்பெற்று, எழுந்து நின்று, வெண்மை உள்ளமும் உண்மை உரைகளும் திண்மை வினைகளும் கொண்டு, நம்மை நோக்கி, இவ்வுலகத்தைக் காட்டித் தன்னோடு நடந்து வரக் கூவுவானானால், நாம் அனைவரும் அவன் மேலாக்கத்தைப் பார்த்து ஐயுற்று, அவன் மேல் விழுந்து பிடுங்குவது போல், அவன் கொண்ட நெஞ்சின் அகலம் என்ன, அதனுள் புதைந்து கிடக்கும் அன்பின் ஆழம் எவ்வளவு, அவன் தன்னோடு நடையிடக் கூறுகின்ற சொற்களில் எத்தனைச் சொற்கள் அவன் உள்ளத்திலிருந்து வெளி வந்தன, எத்தனைச் சொற்கள் அவன் உதட்டிலிருந்து குதித்தன, அவற்றின் நீள அகலம் எவ்வளவு, அச் சொற்களில் உள்ள அறிவுச் சூட்டின் வெப்பத்திறம் எவ்வளவு, அச்சூடு எந்தக்காலம் வரை ஆறாமல் இருக்கும், அவன் மண்டைக்குள் கிடக்கும் மூளைத் திரட்சிக்கு எப்படி இத்தகைய கொழுமை பிறந்தது, அக் கொழுமை நமக்

கிருக்கும் மூளைக் கொழுமையை விட எப்படி உயர்ந்த தாகி-விடும் — என்றெல்லாம் அவனைப்பற்றிய அகப்புற ஆராய்ச்சியில் ஈடுபட்டு, உரைப் பிளிறும் அவனை ஊமைப் படுத்தியும், நடை பயிற்றும் அவன் கால்களை முடப்படுத்தியும், நெறிப்படுத்தும் அவன் அன்புக் கைகளை முறித்தெறிந்தும் விடுவதுடன், அவன் முண்டி முன் செல்லும் பாதைகளிலெல்லாம் இடையூருய்ப் போய்ச் சொற்புதர்களைப் பரப்பியும் பூசற்புரைகளை உண்டாக்கியும், பழிக் குழிகளையும், இழிவுப்பள்ளங்களையும் வெட்டி வீழ வைத்தும், என் றென்றும் நம்மை இருந்த இடத்திலேயே இறுத்தி வைத்துக் கொண்டிருக்கும் நம் அறியாமையை என்னென்பது?

'செடி சாய்ந்தால் நடலாம்; மரஞ் சாய்ந்தால் நட முடியாது'' என்னும் பழமொழிக்கோர் எடுத்துக் காட்டாய் இருக்கும் நம் இனத்தின் உட்புற அரிப்புகளையும் வெளிப்புற வெடிப்புகளையும் எண்ணி மாளாது. எத்தனை எத்தனைக் குலங்களாக, கொடிக-ளாக நாம் பிரிந்து வேறோடிக் கிடக்கின்றோம் என்று எண்ணி நம்முள் நடுங்குபவர்கள் எத்தனைப்பேர் இருப்பர்? அவருள் எத்த-னைப்பேர் அக் குலச் சகதியினின்றும் கொடிச் சிக்கலினின்றும் விடுபட்டும் அறுபட்டும் வெளியே வந்திருப்பர்? அத்துறையில் நமக்கு வழிகாட்டிச் செல்லும் தலைவர்களில் தம் சொல்லுக்குத் தாமே நடந்து காட்டிய மெய்ம்மையாளர் எத்தனைப் பேர் இருப் பர்? அவ்வாறு இல்லாதவர்களை நாம் இன்னும் நம்பிக்கொண்டு கிடப்பதில் நமக்கு ஏன் இவ்வளவு பேராசை? அதில் ஒளிந்தி-ருக்கும் நம் தந்நலப் பற்றுக்கு நாம் இட்டிருக்கும் பொதுநலத் திரை எவ்வளவு மொத்தமானது! வலியது! இத்தனையும் சேர்ந்து நம்மை இன்னும் எத்தனை நூற்றுண்டுகளுக்குத்தான் இப்படியே வைத்திருக்கப் போகின்றனவோ? உண்மையாக, அத்தனை நூற் றுண்டிற்குப் பின்னும் நாம் அப்படியே இருக்க மாட்டோம் என் பதற்கு நம்மிடம் இருக்கும் உறுதி தான் என்ன?

கட்சியென்றும் தலைமையென்றும் நாம் நம்மை எவ்வளவு கட்டுப்படுத்திக் கொண்டு கிடக்கின்றோம்! அவ்வாறு கட்டுப்

பட்டுக் கிடப்பதை வேறு கடமையென்று கூறி நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு வருகின்றோம். நமக்குள் நாம் கீழாக நடந்து கொள்வதையும் நமக்குள் நாமே ஏமாற்றிக்கொள்வதையும் கொள்ளையடிப்பதையும் பிறர் அறியக் கூடா தென்பதற்காக ஒரு பெரிய கருந்திரையிட்டு மூடி விட விரும்புகின்றோம். அத் திரைக்குக் கண்ணியம் என்று பெயரிட்டுக் கொண்டோம். நமக்குள் நாம் உண்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஒருவரை யொருவர் மடிய விழ்த்துக் கொள்ளக் கூடா தென்றும் — தேவையான பொழுது கூட நம்மில் ஒருவனை நாம் எச்சரிக்கத் தவறி விடுகின்றோம். நம்மிடம் ஒழுக்கம் என் னும் பெயரில் ஒழுங்கின்மை வளர்ந்து வருகின்றது கடமை என்னும் பெயரில் கயமை மிகுந்து வருகின்றது. கண்ணியம் என்னும் பெயரில் கோழைத்தனம் ஊடுருவப் பார்க்கின்றது. நமக் குள் அரித்தெடுக்கும் பொய்மைப் புழுக்களை வைத்துக் கொண் டும், போலி ஆகுலங்களை வைத்துக் கொண்டும், நாம் எப்படி-யும் பிறரை வென்று விட முடியாது. நம்மிடம் உள்ள கத்திகளைத் துருப்பிடிக்க விட்டு விட்டு, அதன் மேலுள்ள உறைகளை பளப-ளப்பாக்கி வைத்துக்கொண்டு, நாம் எந்தப் போரிலும் குதித்து விட முடியாது. அத்தகைய நிலை நமக்கு மேலும் மேலும் தோல் விகளையே உண்டாக்கிக் கொடுத்து, நம்மை மீண்டும் மீண் டும் இருந்த இடத்திற்கே சறுக்கிக் கொண்டு போய் நிறுத்தும். உலக வரலாறு இப்படித்தான் கூறுகின்றது. சூழ்ச்சிகளையும் பொய்ப்பூசல்களையும் வேரறுக்க அச்சூழ்ச்சிகளையும் பொய்ப்பூ-சல்களையுமே கடைப்பிடிக்க வேண்டும் என்பது, அவர்களின் வேத, புராணங்களைப் போலவே பழைய நெறிமுறையாகும்.

'வயிரத்தை வயிரத்தால் தான் அறுக்க வேண்டும்' என்னும் பழமொழி இதற்கு முழுமையாகவே பொருந்தாது. சூழ்ச்சியும், பொய்யும் வயிரம்போலும் அத்துணை வலிந்ததன்று. சூழ்ச்சியை-யும் பொய்யையும் வயிரத்திற்கு ஒப்பிட்டால் அறிவையும், உண் மையையும் எதற்கு ஒப்பிடுவது? இப்படிப்பட்ட பொய்மை நிரம் பிய- வெறி நிறைந்த சூழ்ச்சிகள்- என்றைக்கும் ஒன்றையொன்று வெற்றி கொண்டதில்லை. எனவேதான் நம் பகைவனும் நம்மை

முற்றிலும் ஒழிக்க முடியாமல் கடந்த மூவாயிர மாண்டுகளாக நாம் போராடிக் கொண்டு கிடக்கின்றோம். நம் கடந்தகால வரலாற்றில் நாம் வெற்றி கொண்ட எழுச்சி நிலைகளும், தோல்வியுற்ற வீழ்ச்சி நிலைகளும் மாறி மாறி வந்து கொண்டிருப்பதை எண்ணிப்பார்க்கையில், நம் முனைப்பு நிலையில் எங்கோ ஒரு குறைபாடு உள்ளதென்றே முடிவுகட்டத் தோன்றுகின்றது. நம் ஒட்டு மொத்தப் போக்கில் கட்டாயம் சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டே ஆக வேண்டும் என்று உறுதி கொள்கின்றது நெஞ்சம்.

நமக்குள் இனி மேல் ஒரு பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இது வரை நம்முள் ஒளிந்து கிடக்கும் பொய் பூசல்களும் போலிப் பெருமைகளும் அவ்வப்பொழுது எழுந்து நம்மையும் நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் அலைக்கழிக்கின்றதை நமக்குள் நாமே மூடிப்பழக்கப் பட்டு விட்டோம். நம்முள் ஒருவன் செய்கின்ற சில தீமைகளை— சில புரைகளைப் பிறரறி-யாமல் நாமே மென்று விழுங்கிப் பழக்கப் படுத்திக் கொண்டோம். அவன் செய்கின்ற சில நல்ல செயல்களுக்காக, அவனால் வருகின்ற சில நன்மைகளுக்காக அவன் எழுப்புகின்ற பொய்மைத் தீ நாற்றத்தையும் போலி யாரவாரங்களையும் பொ-றுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று நமக்குள் நாமே கமுக்கமாகப் பேசிக் கொள்கின்றோம்; இல்லையா? இவ்வாறு பொய்-மையின் குளிரைத் தாங்கிக் கொள்ள முனையும் நாம், உண்மை-யின் சூட்டைத் தாங்கிக் கொண்டால் என்ன? உண்மையின் சூடு அவ்வளவு கொடுமையானதும் அன்று. பொய்மைக் குளி-ரிலேயே நம்மை முழுதும் மூடிப் போர்த்துக் கொண்டாகிலும் கிடந்து பழக்கப் பட்டு விட்டதால் உண்மையின் சிறிதளவான சூட்டிற்குக் கூட நாம் துடிதுடித்துக் கண்ணீர் விட்டுக் கதறி-யழத் தொடங்கி விடுகின்றோம். ஆனால் அவ்வுண்மையின் சூடு-தானே பொய்மையின் குளிரை மெய்யாக ஓட்ட வல்லது என்று நாம் உணர்ந்து கொண்டு அதைப் பொறுத்துக் கொண்டால் என்ன?

நான் வெளிப்படையாகச் சொல்ல விரும்புவது இது: நம் குறைபாடுகளை நாம் முகத்துக்கு முகம், வாய்க்கு வாய்; கண்ணுக்குக் கண் நின்று பேசிப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். ஒருவனைப்பற்றி அவன் முதுகுப் புறத்திலும் அவன் தூங்குகின்ற பொழுதுமே பேசிப் பேசி நமக்குப் பழக்கப் பட்டு விட்டது. அவன் முன்னுக்கு முன் வந்து நின்று பேச அஞ்சுகின்றோம். அதிகாரத்திலோ, பதவியிலோ, அல்லது நமக்குத் தலைமையாகவோ இருக்கும் அவன், நம்மை நாம் நின்ற இடத்திலிருந்து விரட்டி விட்டால் என்ன செய்வது, எங்கே போவது என்றெல்லாம் எண்ணிப்பார்த்து அப்படிப்பேசத் தயங்குகின்றோம். உள்ளத்தில் அவனைப் பற்றிய வேற்றுமைகளைச் சுமந்துகொண்டு பொய்யாக அவன் முன் நின்று பேசிக்கொண்டிருக்கின்றோமே என்று நாம் வெட்கப்பட்டுக்கொள்வதில்லை. அதனால் உண்மையைப் பேச அஞ்சவேண்டியிருக்கின்றது. நாம் நமக்காக மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற சிறுமையான எண்ணத்திலிருந்து விடுபட்டால்தான், நாம் எல்லாரையும் நேருக்கு நேராக நின்று கேள்வி கேட்கத் தோன்றும்; நேருக்குநேராக நின்று கண்டிக்க — தேவையானால் அவர் வருந்தும்படி இடித்துக் கூற நம் நாத் துடிதுடிக்கும்.

நேருக்கு நேராக நின்று இடித்துக் கூறுகின்ற வரையில் நாம் சரியான ஒரு தலைமையைப் பெற முடியாது. குற்றங்களை நம் தனிப்பட்ட ஒருவர்க்காகக் கூட நாம் மூடி மறைத்துவிடக் கூடாது. 'நம்மவர்தானே' என்பதற்காக நாம் நம்மவரைக் கேட்கத்தவறி விட்டால் நம் பகையைவிட இன்னும் கேடான பகைவனுக்குப் பின்னே நாம் நடந்து கொண்டிருக்கிறோம் என்று எண்ணிக்கொள்ள வேண்டியதுதான். 'நம் குறைகளை மூடி மறைக்கப் பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள்' என்று தன்னைப் பின்பற்றுகின்றவர்களைப்பார்த்து எந்தத் தலைவன் சொன்னாலும் அவனை நாம் நம்பக் கூடாது. அவன் நமக்குத் தெரியாமல் எத்தனையோ குற்றங்களை, கொடுமைகளை மறைவாகச் செய்து கொண்டிருக்

கின்ருன் என்பது பொருள். அத்தகையவன் வேண்டுமாஞல் நாட்டைப்பிடிக்கலாம்; ஆட்சியைப்பிடிக்கலாம்; ஆனுல் நம் பகைவனேப் பிடித்துவிட முடியாது. இவ்வரிகள் வெறும் எழுத்துக்கஎல்ல. என்றுமே பொய் போகாத மெய்யுணர்வின் ஓலங்கள்.

தமிழர்களாகிய நமக்கு வந்து வாய்த்த பகை புறத்தே இருந்து வந்த பகைதான் என்பதை நமக்குக் கிடைத்த பழம்பெறும் நூற்கள் ஓயாது பறைசாற்றி நிற்கின்றன. ஆனுல் காலத்தால் அப்புறப்பகை நம் அகப்பகையாக உருக்கரந்து ஊடுருவி நிற்கின்றது. இவ்வகையில் நாம் நல்லன என்று கைப்பற்றிய தீமைகளும் உண்டு; தீமைகள் என்று கைநெகிழ்த்த நன்மைகளும் உண்டு. இவற்றைத் தனித்தனியே இனங்கண்டு கொள்ளாத வரையில் நாம் மேற்கொள்ளவிருக்கும் போராட்டம் எவருடன் என்பதும், நாம் முன்னேறிச் செல்ல வேண்டிய திசை எதுவென்பதும் நமக்கு விளங்காமல் போய்விடும். இவற்றை ஒருவாறு விளங்கிக் கொண்ட பின், சிலவற்றுக்காக நம்மோடு நாமே போராடிக் கொள்ள வேண்டி யிருக்கும்; சிலவற்றுக்காக நம் பகைவருடன் நாம் கைகோத்துக் கொள்ள வேண்டியிருக்கும்; நாம் விரும்பிப் பேராசையுடன் போற்றிவந்த சில பழக்கவழக்கங்களுக்கு நம் கைகளாலேயே தீயிட்டுப்பொசுக்க வேண்டியிருக்கும். நாம் இடையில் ஆகாதவை என்று தூக்கி வீசி விட்டு வந்த சிலவற்றை நாம்மீண்டும் தேடிக் கண்டுபிடிக்கவேண்டியிருக்கும். இம்முடிவுகள் தெரியும்வரை நாம் வெற்றி முகட்டைத் தொட்டு விட்டோம் என்று பீற்றிக்கொள்ளமுடியாது. அவ்வாறு பீற்றிக்கொள்வதிலும் பெருமையில்லே.

நாம் வெற்றி கொள்ளவிருக்கும் பகைப்புலன்களின் அடிச்சுவட்டையும் இதுவரை நாம் கண்டு கொண்டதாகச் சொல்லிக் கொள்ள முடியாது. உண்மை என்ற வாளேக் கைப்பற்ற நாம் பழகிக்கொள்ளவே இன்னும் ஒரு நூற்ருண்டாஞலும் ஆகும்! ஓராயிரமாண்டாஞலும் ஆகும். அதன் மேல் 'அறிவு' என்ற கேட

யத்தை வேறு ஏந்திப்பழகுதல் வேண்டும். அதன் பின் 'ஒழுக்க'க் கவசத்தை நம் உடல் முழுவதும் அணிந்து கொள்ளுதல் வேண்டும். அதற்குப் பின்தான் நம் உடல் தசைக்குள், அதன் நாடி, நரம்புகளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கின்ற *'வீர'* உணர்வு முகிழ்த்து, நம் தசைக் கண்ணறைகள் யாவிலும் பொங்கி வழியும். இவையெல்லாவற்றிற்கும் பின்னர் நடப்பதுதான் வியப்பிலும் வியப்பை நமக்குத் தரும்! உண்மையும், அறிவும், ஒழுக்கமும், வீரமும் நம்மை ஆட்கொள்ளும் அந்நேரத்தில், பகை நம்மை முந்திக்கொண்டுவிடுமோ என்று நினைத்துவிட வேண்டா, அந்தப்பகை தானாகவே நம்முன் தன்னை அழித்துக் கொண்டு நெடுங்கிடையாக வீழ்ந்து இறந்து படும். நம்மை இத்தனை ஆண்டுக் காலமாகக் கட்டழித்துக் கொண்டு வந்த துயரங்கள் அக்கால் நமக்குப் போற்றித் திரு அகவலாக மாற்றப் பெறும். நம்மைத் தாழ்த்தி எழுதி வைக்கப்பெற்ற புராண இதிகாசப் புழுகுகள் யாவும் புழுப்பூச்சிகளுக்கு இரையாக்கப் பெறும். குலவிழிவுகளும், இனக்கட்டுகளும் அறவே அகற்றப்பட்டு மீமிசை மாந்தத் தமிழ்க் குமுகாயம் ஒருங்கே மலரும். அதில் நம்மின் புதிய வரலாறும், பழைய வரலாறும் பொன்னும் மணியும் போல் பொதிந்து போற்றப்பெறும் அந் நற்காலத்தை நோக்கிப்போகவிரும்பும் நாம் ஒவ்வொருவரும் நம் உடலில் ஓடுவது தமிழ் அரத்தந்தானா— தமிழனின் உருவத்தினின்று இன்னும் நாம் மாறாமல்தானே இருக்கின்றோம் — நம்மிடத்தில் பொதுநலவுணர்வு ஓர் எள்ளின் மூக்கத்துணையேனும் உளதா —என்றெல்லாம் நம்மை நாமே எடையிட்டு நிறுத்துப் பார்த்துக்கொண்டு நடையிட்டுச் செல்லுதல் வேண்டும்.

★ ★ ★

# வெடிக்கின்ற புரட்சிக்கு வித்திடுக!

சாதிப் பேய் அழிந்துவரும் இந்நாளில் 'பார்த்த
சாரதியார்' தினமணிசெய் கதிரிதழை ஒவ்வோர்
சாதிக்கும் சிறப்பிதழாய்க் கொணர்கின்றார்; இங்கே
சரிந்துவரும் உணர்வுகளை நிலைநிறுத்து கின்றார்!
'மோதிக்கொண் டழியட்டும் தமிழரினம்' என்றே
முழுசூழ்ச்சிப் பார்ப்பனர்க்குக் கரவான எண்ணம்!
ஏ! தீக்கெட் டும்ஓடி அடிமையுறுந் தமிழா!
ஏமாற்றுக் கொள்கையினை நீயுணர்தல் வேண்டும்!

படிக்கின்ற இளைஞரிடை, பெண்களிடை சாதி
பரவிவரும் இழிநிலையைக் — கேடுகெட்ட போக்கை —
இடிக்கின்ற வகையினிலே தமிழுணர்வைப் பாய்ச்சி
எந்தமிழர் பேரினத்தை ஓரினமாய்ச் செய்க!
துடிக்கின்ற மாணவர்க்குப் பொதுமைநலம் சொல்க!
துவளாத நல்லிளைஞர் மதர்மதர்க்கும் நெஞ்சில்
வெடிக்கின்ற புரட்சிக்கு வித்திடுக! அக்கால்
வீணர்களின் முயற்சியெல்லாம் தூள்தூளாய்ப் போகும்!

## தென்மொழியின் தனித்தமிழ் வெளியீடுகள்

பாவலரேறு

# பெருஞ்சித்திரனார்

அவர்களின்

## புதுமுறை இலக்கியங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கனிச்சாறு | (முதல் தொகுதி) | 15-00 |
| 2. | கனிச்சாறு | (இரண்டாம் தொகுதி) | 11-00 |
| 3. | கனிச்சாறு | (மூன்றாம் தொகுதி) | 17-50 |
| 4. | எண்சுவை எண்பது | | 4-50 |
| 5. | பாவியக்கொத்து | [அச்சில்] | 4-50 |
| 6. | பாவியக்கொத்து | [2-ஆம் தொகுதி] | (அச்சில்) |
| 7. | ஐயை முதல்பகுதி | | 4-00 |
| 8. | ஐயை 2-ஆம் பகுதி | | 5-00 |
| 9. | ஐயை [இருபகுதிகளும் இணைந்தது] | | 8-50 |
| 10. | கொய்யாக்கனி | [மறுபதிப்பு] [அச்சில்] | 6-00 |
| 11. | கற்பனை ஊற்று-கட்டுரைகள் 1-ஆம் பகுதி | | 4-50 |
| 12. | கற்பனை ஊற்று ,, 2 ,, | | [அச்சில்] |
| 13. | பள்ளிப்பறவைகள்-1 குழந்தைப்பாடல்கள் 1-தொகுதி | | 4-00 |
| 14. | பள்ளிப்பறவைகள் 2-ஆம் தொகுதி | | [அச்சில்] |
| 15. | மகபுகுவஞ்சி | | 3-00 |
| 16. | அறுபருவத் திருக்கூத்து | | [அச்சில்] |
| 17. | நூறாசிரியம்—முதல்பகுதி | | 2-50 |
| 18. | தன்னுணர்வு | | 0-75 |
| 19. | இளமைஉணர்வுகள் | | 1-25 |
| 20. | பாவேந்தர்பாரதிதாசன் | [அச்சில்] | 1-50 |
| 21. | இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் | | 0-75 |
| 22. | வாழ்வியல் முப்பது | [உரைக்குறிப்புடன்] | 0-75 |
| 23. | தமிழா எழுச்சிகொள் | | 0-75 |
| 24. | ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | | 2-00 |
| 25. | நமக்குள் நாம் | | 0-50 |

---

பிறவிளக்கங்களுக்கு,

**தென்மொழி, சென்னை-600005, தமிழகம்.**

தனித்மிழ்த் தாளிகைகள் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' படியுங்கள்.